334

உ

சிவமயம்.

தேவி துணை.

# நாமாவளிக் கொத்து.

ஆக்கியோன்

இராம. வயித்தியநாதசர்மா அவர்கள்.

பதிப்பாளர்

S. இரத்தினம்பிள்ளை அவர்கள்.

ஸ்ரீகுஞ்சிதசரண பிரஸ்,

சிதம்பரம்.

1-1932.

16 JAN 1936

Q23: 417
N32
177717

சிவமயம்.

# நூன்முகம்.

## திருவிளையாடற் புராணம்.

1. அபார ஸம்ஸார ஸாகரத்தில் அநாதிகாலமாகவருந்துகின்ற ஆன்மகோடிகளுக்குப் புக்திமுத்தியைக்கொடுத்தருளப் பரசிவம்கோயில்கொண்டக்ஷேத்திரங்கள் பல. அவற்றுள் தீர்த்தம், க்ஷேத்ரம், மூர்த்தி என்னும் மஹிமைமூன்றும் ஒருங்கே பொருந்தப்பெற்றது ஸ்ரீமத் ஹாலாஸ்யம் (மதுரை). இம் மஹா க்ஷேத்திரத்தின் வைபவத்தை ஹாலாஸ்ய மஹாத்ம்யம் முதலிய வடமொழி க்ரந்தங்களிலும், திருவிளையாடற்புராணம் முதலிய தென்மொழி நூல்களிலும் காணலாம்.

## ஸ்ரீமத் ராமாயணம்.

2. ஸ்ரீய: பதியாகிய பரந்தாமன் துஷ்டநிக்ரஹ-சிஷ்டபரிபாலனங்களை ஸ்வதர்மமாகக்கொண்டு எடுத்த அவதாரங்கள் பத்து. அவற்றுள் ஸ்ரீமத் ராமாவதாரமே மிக்கமேலாகிய தென்பதை ஸ்ரீமத் வால்மீகிராமாயணம் முதலிய வடமொழி ப்ரபந்தங்களிலும், கம்பராமாயணம் முதலிய செந்தமிழ் நூல்களிலும் நன்கு காணலாம்.

## பெரிய புராணம்.

3. ப்ராம்ஹணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்ரன் என்னும் வர்ணபேதங்களாலும்; ப்ரம்ஹசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் என்னும் ஆச்ரம தர்மங்களாலும்; கர்மம், உபாஸனம், ஜ்ஞானம் என்னும் அப்யாஸ ஸோபானங்களாலும் அடைதற்கரிய பரம்பொருளை அன்பிலீடுபட்ட அடியார்கள் அதிவிரைவில் அடையலாமென்ற விஷயத்தைப் பக்தவிலாஸம் முதலிய வடமொழி கிரந்தங்களிலும், பெரிய புராணமுதலிய தென்மொழி நூல்களிலும், செவ்வனே காணலாம்.

## இந்நூலாசிரியர்.

4. முன்னொரு கற்பத்தில் பிரமன் ஆயிரத்து நூற்றெண்பது வேத சாகைகளைத் தனது தபோவிசேஷத்தால் ப்ரணவமென்னும் ஓரக்ஷரமாகிய ஓங்காரத்தில் ஒடுக்கினான்.

பின்னொரு காலத்தில் வேதவ்யாஸர் ஆயிரத்து நூற்றெண்பது உபநிஷதங்களையும் பரமன் க்ருபையால் ஐந்நூற்றைம்பத்தைந்து ஸூத்ரங்களில் அடக்கினார்.

இச்சமயம் நமது கவிச்சக்ரவர்த்தி கலாநிதிபத்ராதிபர் அகத்தியான்பள்ளி ப்ரம்ஹஸ்ரீ இராம-வயித்தியநாதசர்மாஅவர்கள் சிதம்பரம் குஞ்சிதசாணப்ரஸ் ஸ்ரீமான் இரத்தினம்பிள்ளை அவர்கள் விருப்பத்திற்கிணங்கி, நூலளவிலும், அர்த்த புஷ்டியிலும் மிகக் கம்பீரமாக ப்ரகாசிக்கும் வடமொழி தென்மொழி ஹாலாஸ்யம், ராமாயணம், பக்தவிலாஸம் என்னும் இம் மூன்று ப்ரபந்த ரத்னங்களையும் தேவியனுக்ரஹத்தால் ஸங்கீத ஸம்ப்ரதாயம்ததும்ப, பக்திரஸம் பெருக, செந்தமிழ்த் தேனொழுக, பரமன் அருள்சுரக்க, அன்பர்கள் அந்தரங்கம் கவர, நாமாவளிக்கொத்தாக அமைத்தனர்.

5. இவரது மனோபீஷ்டங்கள் மேலும் மேலும் பெருக எல்லாம்வல்ல ஸ்ரீமந் நடராஜராஜரை என்னுள்ளன்புடன் ப்ரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

உபந்யாஸரத்னகரம்,

ஸி. எஸ். சிவகாமஸுந்தரதீக்ஷிதர்,

நெ-6. தெற்குஸந்நிதி, சிதம்பரம்.

ப்ரஜோத்பத்தி கார்த்திகை, 24. 9-12-1931 புதன்.

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

---

சிதம்பரம்,

சேந்தமிழ்ப் போதகாசிரியர்

சி. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

நேரிசை வெண்பா.

சத்தியருள் பெற்றுமகிழ் சாந்தவைத்ய நாதசர்மா
சத்தியருள் மாச்சோக்கன் றன்கதைசீர்ச்—சத்திநிபா
தத்தருளார் மாக்கதைரா மன்கதைக டாமிவற்றை
வைத்தனனு மாவளியா மன்.

உ

சிவமயம்.

தேவி துணை.

# கணேசர் நாமாவளி.

கஜமுக கஜமுக கண நாதா
கருதுவர் கருத்தமர் குண நீதா
பஜனைசெய் தனமருள் தர வாவா
பரமசத் குருபர மக தேவா.

அம்பிகை யருளிய வம ரேசா
அகிலமு ழுதுமமர் தரு மீசா
நம்பினர்க் குதவிசெய் நயமணியே
நலமிகச் செய்வது முனதணியே.

சிவமயம்.

# திருவிளையாடல் நாமாவளி.

---

சாம்ப சதாசிவ சாம்பசிவம்

சாம்ப சதாசிவ சாம்பசிவம்.

ஆலவாயி னிடத் தடர்ந்த சிவம்
அடியார்க ளிடத்தன்பு தொடர்ந்த சிவம் 1

தேவேந்திரன் பாபந் தீர்த்த சிவம்
திருவால வாயையே காத்த சிவம் 2

வாரணத் தின்சாப மாய்த்த சிவம்
மாட மதுரை தனில் வாய்த்த சிவம் 3

திருநகரங்கண்டு திகழுஞ் சிவம்
சீவன் முத்தி புரத்தில் மகிழுஞ் சிவம் 4

தேவி யவதரிக்கச் செய்த சிவம்
திரும்ப மணஞ்செய்வங் கெய்த சிவம் 5

திருக்கூத் திருவர்க்காகச் செய்த சிவம்
சிறுவனுக் கன்னமிடச் செய்த சிவம் 6

அன்னக்குழிவையையு மழைத்த சிவம்
அன்பாயேழ் கடல்வர வழைத்த சிவம் 7
மலையத் துவசனை யழைத்த சிவம்
மன்னனுக் கிரன்வர வழைத்த சிவம் 8
சென்டு வளைவேல் கொடுத்த சிவம்
செக்கர்வான் போல்சடை யெடுத்த சிவம் 9
வேலைமேல் வேல்விழக் கண்ட சிவம்
விண்ணவன் முடிவிழக் கண்ட சிவம் 10
மேருவிற் சென்டு விடுத்த சிவம்
வேதத்தின் பொருளை யடுத்த சிவம் 11
விலைமிகு மாணிக்கம் விற்ற சிவம்
விட்டவேலையை வற்றப் பெற்ற சிவம் 12
கூடலாக் கூட்டிக் குறித்த சிவம்
குணமுடன் முப்புர மெரித்த சிவம் 13
திருவிளை யாடலா நடித்த சிவம்
திங்களைச் சடையினின் முடித்த சிவம் 14
கரும்பைக் கல்லானை தின்னச்செய்த சிவம்
களிற்றைக் கணையினாலே யெய்த சிவம் 15

விருத்த குமாரபால ரான சிவம்
வேடிக்கையா யுள்ள மோன சிவம் 16
மாறிநின் றாடியே மகிழ்ந்த சிவம்
வன்பழிக் கஞ்சியே வாழ்ந்த சிவம் 17
மாபா தகந்தனை மாய்த்த சிவம்
மாணாக்கனை வெட்டிச் சாய்த்த சிவம் 18
வெவ்வரவை வெட்டிக் களித்த சிவம்
விடையினாற் பசுவை விளித்த சிவம் 19
சேவக மெய்க்காட்டி நடித்த சிவம்
சிறப்பா யுலவாக்கிழி கொடுத்த சிவம் 20
மன்மதன் போல்வளை விற்ற சிவம்
மாசித்தி யுபதேசித்த சிவம் 21
இடபத்தி லச்சினை யிட்ட சிவம்
இரசவாதஞ் செய்துமே விட்ட சிவம் 22
படையிடை நீர்ப்பந்தல் வார்த்த சிவம்
பணியாச்சோ ழனைமடுப் பார்த்த சிவம் 23
அன்பனுக்குக் கோட்டை யளித்த சிவம்
ஆநந்த மாயாடிக் களித்த சிவம் 24

மாமனாய்வந்து வழக் குரைத்த சிவம்

வரகுணன் பாசத்தை மறைத்த சிவம் 25

விறகைத் தலையிற்றூக்கி விற்ற சிவம்

வேகமா யோலையனுப்பித்த சிவம் 26

பலகைகொடுத்துமிகக்க ளித்த சிவம்

பன்றிக ளுக்குப்பா லளித்த சிவம் 27

இசைவாதை யின்பமாய் ஜயித்த சிவம்

ஏனத்தை யமைச்சா யிசைத்த சிவம் 28

கரிக்குரு விக்குக்கதி யளித்த சிவம்

காலனைக் காலா லுதைத்த சிவம் 29

நாரைக்கு முத்தி நவின்ற சிவம்

நான்மறை யின்பொரு ணவின்ற சிவம் 30

திருவால வாயாகச் செய்த சிவம்

திவ்யமாப் பேரம் பெய்த சிவம் 31

சங்கப் பலகையைத் தந்த சிவம்

தருமிக்குப் பொற்கிழி தந்த சிவம் 32

கீரனைக் கிழிருந் தெடுத்த சிவம்

கீரனுக் கிலக்கணங் கொடுத்த சிவம் 33

சங்கத்துச் சண்டையைத் தீர்த்த சிவம்
சடையினிற் கங்கையைத் தரித்த சிவம் 34
இடைக்காடன் பிணக்கைத் தீர்த்த சிவம்
இன்பமாய் வலைபோட் டீர்த்த சிவம் 35
திருவாத வூரர்க்குத் தெரிந்த சிவம்
திவ்யமா யடியார்க ளறிந்த சிவம் 36
நரியைப் பரியாகச் செய்த சிவம்
நரியாகப் பரியையுஞ் செய்த சிவம் 37
திருமுடி யில்மண் சுமந்த சிவம்
தென்னவன் சுரமதைத் தகர்த்த சிவம் 38
சமணரைக் கழுவேற்றி வதைத்த சிவம்
சமனைத்தன் பாதத்தா லுதைந்த சிவம் 39
வன்னிகி ணறுலிங்க மழைத்த சிவம்
வகையுட னடியாரைத் தழைத்த சிவம் 40

சாம்ப சதாசிவ சாம்ப சிவம்
சாம்ப சதாசிவ சாம்ப சிவம்.

முற்றுப் பெற்றது.

உ

சிவமயம்.

# தேவி துணை.

ஸ்ரீ

# பெரியபுராண நாமாவளி.

சாம்பச தாசிவ சாம்பச தாசிவ
சாம்ப சதாசிவ சாம்பசிவா
சாம்பச தாசிவ சாம்பச தாசிவ
சாம்ப சதாசிவ சாம்ப சிவா.

அம்பலத் தாண்டவ மாடுஞ்ஸ்ரீ வாபர
மானந்தத் தாண்டவங் கூடுஞ் சிவா
தம்பல மாகத் தரும்பல வந்தணர்
தம்மொ டுயர்தில்லை நாடுஞ் சிவா 1

ஒருநீல கண்டத்தைத் திருநீல கண்டமென்
றோதுங்கு லாலரு வந்த சிவா
இருநீல விழியாரு ளொருதார மதுதாவென்
றியற்பகை முன்னரி ரந்த சிவா 2

இளையான் குடிமாற ரில்லிற்பு குந்தன
மேற்க வெழுந்துரு வான சிவா
சளையாது வேடத் தவர்க்கீயு மெய்ப்பொரு
டன்முன்னர் மெய்ப்பொரு ளான சிவா 3

அண்டர் பிரான்றிருத் தொண்டரி டத்திலன்
பார்விறன் மிண்டர றிந்த சிவா
தொண்டர்க்குக் கோவணத் தொண்டமர் நீதியின்
றொண்டறி யச்சென்று கந்த சிவா 4

அடியார்த மக்குத்துன் பாற்றுவ ரைத்தெறு
மன்பெறி பத்தர றிந்த சிவா
பொடியார் விபூதிகண் டடிவீழ மேனாதி
பொற்பத மேறப் புரிந்த சிவா 5

கண்ணப்ப னெச்சிலை யுண்ணப்ப னேயெனக்
காணப்ப வென்றுண்டு கந்த சிவா
எண்ணக்குங் குலியத்தொண் டேற்ற கலயனா
ரின்பம் பெறமுன்னை முந்த சிவா 6

மானக்கஞ் சாறர் மனைபுகுந் தன்னோர்
மகள்குழ லேற்று மகிழ்ந்த சிவா
வானற்ற வத்தரி வாட்டாய ரூட்டி
வளம்பெற முன்னர டைந்த சிவா 7

பஞ்சாக்க ரத்தினைப் பண்ணுற வேயினிற்
பாடுமா னாயர்முன் பெற்ற சிவா
அஞ்சாக்க ரங்கொ டரைத்தளித் திடுசந்த
னக்காப்பு மூர்த்திநே ருற்ற சிவா 8

பூக்கள் புனைந்துனக் காக்குந் திருத்தொண்டு
பூண்ட முருகர் புகழ்ந்த சிவா
ஊக்கத் துருத்திர மோதும் பசுபதிக்
குற்றருள் செய்தேயு கந்த சிவா 9

திருநாளைப் போவாரைத் தில்லைவா ழந்தணர்
தேறச்செய் திட்டருள் செய்யுஞ் சிவா
கருவேர தறநாளு மடியார்வத் திரமாசு
கழுவுந் திருத்தொண்ட ரெய்துஞ் சிவா 10

தந்தையின் றாள்சன்மத் தாளற வீட்டிய
சண்டேச ரோடென்றுந் தங்குஞ் சிவா
சிந்தையுன் பாதத் திருப்போதுக் காக்கிய
திருநாவுக் கரசரை நங்குஞ் சிவா 11

சிவனடி யார்குலந் தேறு துண் மைப்பணி
செய்தகு லச்சிறை தேருஞ் சிவா
குருவடி கண்டருள் கூடும்பெ ருமிழலைக்
குறும்பர் மனத்தினி லேறுஞ் சிவா 12

அம்மையெ னப்பே ரடைந்துறக் காரைக்கா
லம்மையை யம்மையே யென்ற சிவா
நம்மைய டிமைகொ ணாவுக் கரசர்பேர்
நாடுமப் பூதிமு னின்ற சிவா 13

நற்பணி யர்ச்சனை நாடுந் திருநீல
நக்கரின் றொண்டு நயந்த சிவா
அற்புத நமிநந்தி யடிகள் கனவினில்வந்
தாரூரி டங்கொண்ட மர்ந்த சிவா 14

சீர்காழி வாழ்வெனச் செப்பச் சிறந்த
திருஞான சம்பந்தர் தேறுஞ் சிவா
காராளர் மாகுலச் சீராள ரேயர்
கலிக்காமர் கண்டெரு தேறுஞ் சிவா 15

மூவாயி ரம்பா மொழிந்தரு ளுந்திரு
மூலர்முன் யோகமொ ழிந்த சிவா
நாவார வென்று நமச்சிவா யச்சொல்
நவின்றிடு தண்டிந யந்த சிவா 16

சூதிற்பெ றும்பொருள் தொண்டர்க்கென் றேயமு
தூட்டிடு மூர்க்கரு கந்த சிவா
சோதியு னைந்தெழுத் தோதிம கஞ்செய்த
சோமாசி மாறர்ம கிழ்ந்த சிவா 17

கல்லா லெறியுங் கடனேயுன் பூசைக்
கருத்தெனுஞ் சாக்கியர் காணுஞ் சிவா
எல்லா மடியவர்க் கென்றுகொ டுக்குந்தொண்
டேற்றசி றப்புலி பேணுஞ் சிவா 18

பிள்ளைக் கறிதனைப் பெட்போட ளித்தடி
பேணுஞ் சிறுத்தொண்டர் பெற்ற சிவா
வள்ளற் றகைசேர மான்பெரு மாள்சீர்
வளம்பெறக் கண்டும கிழ்ந்த சிவா 19

கைத்திருத் தொண்டைக் கடைப்பிடிக் கச்செய்யுங்
கணநாதர் கண்டுக ளிக்குஞ் சிவா
பைத்தலைச் சர்ப்பா பரணநின் றொண்டர்
பணிசெயுங் கூற்றுவர் பற்றுஞ் சிவா 20

பொய்யடி மையில்லாப் புலவர்த மக்கருள்
புண்ணிய மேயுரு வான சிவா
மெய்யடி யார்க்கீயும் வேந்தர்பு கழ்ச்சோழர்
மேன்மைபெற நினைத் தாண்ட சிவா 21

நற்றிரு நீறணி நண்பர்க் குதவிசெய்
நரசிங்க முனையர் நயந்த  சிவா
பற்றிய மீனென்றன் பாலுனக் கீயதி
பக்தர் மனத்திற் படிந்த  சிவா 22

காதன் மனையாள் கரந்தறித் தார்கழற்
கழுவுங் கலிக்கம்பர் கண்ட  சிவா
கோதக லுன்றிருக் கோயில் விளக்கிடுங்
கொள்கைக் கலியருட் கொண்ட  சிவா 23

ஈசவு னன்பரை யேசுவார் நாவை
யிழுத்தரி சத்திவ ழுத்துஞ்  சிவா
காசறு வெண்பாக் கழறுமை யடிகள்
காடவர் கோன்மன நத்துஞ்  சிவா 24

திருவிளக் கேற்றுந் திருப்பணி செய்து
திகழ்ந்த கணம்புல்லர் தேறுஞ்  சிவா
திருவிளக் கந்தரத் திகழுங்கோ வையொன்றைச்
செய்தகாரி மனத் தேறுஞ்  சிவா 25

நீற்றி னெறியை நிலவச்செய் தொண்டினி
　　னின்ற நெடுமாறர் கண்ட　　சிவா
மாற்றுத லில்லா மனத்தால யத்துனை
　　வைத்தவாயி லாருட் கொண்ட　　சிவா　26

பூண்டமர் வென்ற பொருளடி யார்க்கீயும்
　　புகழ்முனை யடுவார்முன் போற்றுஞ்　சிவா
காண்டகு மாதின் கரந்தடிந் திட்ட
　　கழற்சிங்கர் தன்வினை மாற்றுஞ்　　சிவா　27

எப்போதுந் தொண்டே யிடங்கழி யாரி
　　னிடங்கழி யாதென்றுங் கூடுஞ்　　சிவா
நற்போது மோந்திடு நங்கையின் மூக்கை
　　நறுக்குஞ்செ ருத்துணை நாடுஞ்　　சிவா　28

பத்தன்பு கழ்த்துணை பசிநோய் தணியப்
　　படிக்காச ளித்துமகிழ்ந்த　　சிவா
பொத்துமு னெல்லைப் புசித்தவ னைத்தெறும்
　　போர்க்கோட் புலிமுன்பு கழ்ந்த　　சிவா　29

பத்தரா கப்பணி பண்பினரி யாரும்
பரகதி காணப் பணிக்குஞ் சிவா
சுத்தவெ ளிப்பர மன்றனைப் பாடிடுந்
தொண்டருக் கின்பம ளிக்குஞ் சிவா 30

சித்தஞ் சிவனிடம் வைத்திடுந் தொண்டர்
திருவருள் சேர்ந்திடச் செய்யுஞ் சிவா
நத்திடு மாருரி டத்திற்பி றந்தோரை
நற்கதி சேரருள் பெய்யுஞ் சிவா 31

திருமேனி முப்போதுந் தீண்டுவார் தம்மைச்
சிறப்புறச் செய்பரஞ் சோதி சிவா
அருமேனி திருநீற தணிமேனி வடிவாக
வடைவோர் தமக்கரு ளாதி சிவா 32

அப்பாலு மடிச்சார்ந்த வடியார் தமக்குமு
னப்போதப் போதங் கருளுஞ் சிவா
எப்போதும் பூசலா ரெண்ணுந் திருக்கோயி
லேறிம கிழ்ச்சி பெருகுஞ் சிவா 33

மாதேவர் தம்பணி மறவாதி யற்றிய
மங்கையர்க் கரசிம கிழ்ந்த சிவா
வாதேயி லாதுகோ வணமுங்கீ ளுந்தரு
மாநேசர் நித்தம்பு கழ்ந்த சிவா 34

கோயிற்பணி கொண்ட கோச்செங்கட் சோழரைக்
கொண்டுயர் தில்லையுட் கூடுஞ் சிவா
வாயிற்சொ லுங்காழி மன்பண்கள் வீணையில்
வாசித்தி யாழ்ப்பாணர் பாடுஞ் சிவா 35

சந்தங்கொள் சுந்தரர் தந்தையர் தாயராஞ்
சடைய ரிசைஞானி யாயுஞ் சிவா
சுந்தர நூலிது சுந்தர மாகச்
சொலச்செயுஞ் சுந்தர ரேயுஞ் சிவா 36

சாம்பச தாசிவ சாம்பச தாசிவ
சாம்பச தாசிவ சாம்ப சிவா
சாம்பச தாசிவ சாம்பச தாசிவ
சாம்பச தாசிவ சாம்ப சிவா.

முற்றுப் பெற்றது.

---

உ

# இராமாயண நாமாவளி

ராம ராம ஜய ராஜா ராம்

ராம ராம ஜய சீதா ராம்

1 உலக மமைத்தன் முத லுடைத்தவ ராம்

ஓர்தசவவதாரம் படைத்தவ ராம்

2 தலமிகு மயோத்திவந் திறுத்தவ ராம்

தசரதன் பிள்ளைக்கலி யறுத்தவ ராம்

3 கௌசலை பெற்றதோர் புத்திர ராம்

கழறுமி லக்குவற்குப் பத்திர ராம்

4 கௌசிக முனியின்பின் சென்றவ ராம்

கருந்தாடகையைக் கொன்று வென்றவ ராம்

5 அரியதோர் வேள்விப்ர யோசன ராம்

அகலிகை சாபவி மோசன ராம்

6 பெரியகோ தண்டம்வளைத் தொடித்தவ ராம்

பிராட்டி ஜானகிமணம் முடித்தவ ராம்

7 பரசுராமன் வில்லையுந் தறித்தவ ராம்
பார்தச ரதன்வழி நெறித்தவ ராம்

8 கரவுசிற் றன்னைசொல் லுக் கிணங்தவ ராம்
காடுசெல மரவுரி யணைந்தவ ராம்

9 சீதையி லக்குவரோ டேகின ராம்
சீர்கொளுங் கங்கைக்கரை போகின ராம்

10 பாதையிற் குகன்பரி வார்ந்தன ராம்
படகினி லேறிக்கரை சேர்ந்தன ராம்

11 பரத்வாச ராச்ரமம் பார்த்தன ராம்
பரதர்க்குப் பாதுகை சேர்த்தன ராம்

12 திருச்சித்திர கூடத்திற் சேர்ந்தன ராம்
திகழ்தண்ட காரண்யம் நேர்ந்தன ராம்

13 கருஞ்சூர்ப்ப நகைமூலை யறுத்தவ ராம்
கரதூ ஷணர்களை யொறுத்தவ ராம்

14 ஒருமாய மானின்பி னோடின ராம்
உலகுமா தாவைநாடித் தேடின ராம்

15 சடாயுத் தனக்குமோக்ஷ மளித்தவ ராம்
சானகி தன்னைத்தேடி யிளைத்தவ ராம்

16 கடாக்ஷ மநுமன்பேரில் வைத்தவ ராம்
காவல்சுக் ரீவனை நேசித்தவ ராம்
17 மராமரமேழையுந் துளைத்தவ ராம்
மாதுந்துபி யென்பேற வுதைத்தவ ராம்
18 தராதல வாலிக்குவிண் கொடுத்தவ ராம்
தரைமுடி சுக்ரீவற்குக் கொடுத்தவ ராம்
19 ஆழிகொடுத் தன்னையிடம் விட்டவ ராம்
அநுமன் வரவையெதிர்ப் பட்டவ ராம்
20 எழுபத்து வெள்ளங்களைச் சேர்த்தவ ராம்
எதிர்வருணன்வரவைப் பார்த்தவ ராம்
21 வருணன் வராததற்குக் கடுத்தவ ராம்
வாரிநீரணையாற் றடுத்தவ ராம்
22 தருணங்கண்டு லங்கை சார்ந்தவ ராம்
சாரும்விபீஷணரைச் சேர்ந்தவ ராம்
23 அங்கதன் றனைத்தூது விடுத்தவ ராம்
அநுமன் வாகனமாக வுடைத்தவ ராம்
24 எங்கும் விளங்கயுத்தந் தொடங்கின ராம்
இளைத்தவனைப் போய்வாவென் றடங்கின ராம்

177717



25 கும்பகர் ணுதிகளைத் தொலைத்தவ ராம்
கொடுமூல பலங்களை யலைத்தவ ராம்

26 நம்புமி ராமர்கோடி யாயின ராம்
நானில மெங்குந்தாணு மேயின ராம்

27 இராவணன் றலைபத்து மீர்த்தவ ராம்
இலக்குமியைக் கண்டுகளி சேர்த்தவ ராம்

28 கிரீடம்வி பீஷணர்க்குச சூடின ராம்
கிளம்பிய வயோத்தியை நாடின ராம்

29 பரதற்குச் சேதிமுன்னே விடுத்தவ ராம்
பார்வள்ளத் துடன்பின்னே யடுத்தவ ராம்

30 சரதப்பட் டாபிடேகங் கொண்டவ ராம்
சாருமெம் பவங்களை விண்டவ ராம்

ராம ராம ஜய ராஜா ராம்
ராம ராம ஜய சீதா ராம்.

முற்றுப் பெற்றது.

உ

சிவமயம்.

தேவி துணை.

# கலாநிதி.

இது

## மாதப் பத்திரிகை.

தெய்வம் உண்டோ இல்லையோ, புராணேதிகாசங்கள் மெய்யோ பொய்யோ, மறு உலகமும் மறு பிறப்புமுண்டோ இல்லையோ எனநாஸ்திகம் பேசும் இச்சமயம் நூல்கள்யாவும் மெய்யே! பகவன் முதற்றேயுலகு! தெய்வ வணக்கமே கற்றதனாலாய பயன்! ஆத்ம லாபத்தைத் தேடுவதே மானிடஜன்மத்தின் பிரயோஜனம்! தவஞ்செய்வாரே தங்கருமஞ் செய்வார்! என்று ஆஸ்திகத்தை நிலைநிறுத்துவதோடு, இதன் வருவாயிலிருந்து ஓர் பெரிய தருமக் கலாசாலையையும் பரிபாலிக்கக் கூடியது.

இதற்கு வருடசந்தா ரூ. 2—0—0.

கலாநிதி ஆபீஸ், தேத்தாக்குடி.

(Via) தோப்புத்துறை,

தஞ்சை ஜில்லா.